www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# அலகுத் தேர்வு – 4– 2023

10– ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 50

---

### பகுதி - 1

**பலவுள் தெரிக.** 5 X 1 = 5

1. மேலாண்மை தரும் அறம் என்பது ........... .

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்

இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ..... , ...... வேண்டினார்

அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக

இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத பூமிக்காக

4. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ....... .

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

**பொருத்துக.** 3 x 1 = 3

6. ஆசுகவி – இனிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர்

7. மதுரகவி – சொல்லணி அமைத்துப் பாடுபவர்

8. சித்திரகவி – பாடு எனக் கூறியவுடன் பாடுபவர்

### பகுதி - 2

**ஏதேனும் ஐந்து வினாவிற்கு விடையளி. (வினா 16 கட்டாயம் விடையளி)** 5 x 2 = 10

9. குறிப்பு வரைக – அவையம்.

10. 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!

உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

அ) அடியெதுகை எடுத்தெழுதுக.

ஆ) இலக்கணக்குறிப்பு தருக. கொள்க, குறைக்க

11. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

12. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

13. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது' – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

14. தீவக அணியின் வகைகள் யாவை?

15. பாடலில் இடம் பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

*'கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்*
*கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை'*

16. 'குற்றம்' – எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**ஏதேனும் மூன்றனுக்கு விடையளி.** 3 x 3 = 9

17. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

18. 'சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது' – *இடஞ்சுட்டிப் பொருள் தருக.*

19. 'கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு' – அலகிட்டு வாய்பாடு தருக.

20. ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கையில் கட்டாயம் வைத்திருக்க வேண்டியவை?

21. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

22. காலக் கணிதம் – மனப் பாடப்பகுதியில் எவையேனும் 5 வரிகள் எழுதுக.

## பகுதி - 3

23. **படிவம் நிரப்புக.** 1 x 5 = 5

## பகுதி - 4

24. **அ) நயம் பாராட்டுக.** 2 x 4 = 8

'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிகழ்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே" – வள்ளலார்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

(அல்லது)

ஆ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



25. அ) மொழிபெயர்க்க :

1) Education is what remains after one has forgotten what one has learned in school. Albert Einstein.

2) Tomorrow is often the busiest day of the week - spanish proverb.

3) It is during our darkest moments that we must focus to see the light - Aristotle.

ஆ) பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

“தம்பீ? எங்க நிக்கிறே?

நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.

அங்ஙனக்குள்ளேயே டீ சாப்டுட்டு, பேப்பர்ப் படிச்சிக்கிட்டு இரு .... நா வெரசா வந்துருவேன்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே! அவனெப் பார்த்து ரொம்ப நாளாச்சு!"

## பகுதி - 5

**விரிவான விடையளி.** 2 x 5 = 10

26. அ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. *(அல்லது)*

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

27. அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் வரைக.

*(அல்லது)* ஆ) பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 'மரம் நடு' விழாவுக்கு, வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் 'பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றியுரை எழுதுக.

---

மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
| --- | --- | --- | --- |
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும்:

மாணவ / மாணவியின் கையெழுத்து



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## பத்தாம் வகுப்பு அலகுத் தேர்வு - 4 சேலம் – 2023
## தமிழ் விடைக்குறிப்பு

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 5X1=5

| | | |
|---|---|---|
| **1.** | அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது | **1** |
| **2.** | ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன் | **1** |
| **3.** | அ) கருணையன் எலிசபெத்துக்காக | **1** |
| **4.** | இ) உருவகம் | **1** |
| **5.** | அ) அகவற்பா | **1** |

**பொருத்துக** 3X1=3

| | | |
|---|---|---|
| **6.** | ஆசுகவி – பாடு எனக் கூறியவுடன் பாடுபவர் | **1** |
| **7.** | மதுரகவி – இனிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர் | **1** |
| **8.** | சித்தரகவி – சொல்லணி அமைத்துப் பாடுபவர் | **1** |

### பகுதி - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5X2=10
**வினா எண் 16ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்**

| | | |
|---|---|---|
| 9. | **அவையம்**<br>❖ அறம் கூறும் மன்றங்கள் **அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.**<br>❖ புறநானூறு **"அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்"** என்று இவை பற்றி குறிப்பிடுகிறது.<br>❖ **உறையூர் அறஅவையம் தனிச் சிறப்புப்பெற்றது** என்று இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>❖ மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என்று **மதுரைக்காஞ்சி** குறிப்பிடுகிறது.<br>**(ஏதேனும் இரண்டு கருத்துக்கு மதிப்பெண் வழங்குக)** | 1<br>1 |
| 10. | **அடியெதுகை , இலக்கணக்குறிப்பு**<br>**அடியெதுகை** : கொள்வோர் - உள்வாய்<br>**இலக்கணக்குறிப்பு** : கொள்க, குரைக்க – **வியங்கோள் வினைமுற்று** | 1<br>1 |
| 11. | **தொடரை இருதொடர்களாக்குக**<br>நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு. அதற்குரிய காரணமும் உண்டு. | 2 |
| 12. | **அமர்ந்தான்**<br>**அமர் +த்(ந்) + த் + ஆன்**<br>**அமர்** - பகுதி; த் - சந்தி; த்(ந்) – ந் ஆனது விகாரம்;<br>த் - இறந்தகால இடைநிலை; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி | 1<br>1 |
| 13. | **அணி**<br>இக்குறிளில் பயின்று வந்துள்ள அணி **நிரல்நிறை அணி** ஆகும்.<br>**இலக்கணம்**<br>சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும். | 1<br>1 |
| 14. | **தீவக அணியின் வகைகள்**<br>❖ முதல் நிலைத் தீவகம்<br>❖ இடைநிலைத் தீவகம்<br>❖ கடைநிலைத் தீவகம். | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 15. | **தமிழ்ப் புலவர்களின் பெயர்கள்**<br>அ) கம்பன் ஆ) உமறுப் புலவர் இ) ஐவ்வாது புலவர் | 2 |
| 16 | **திருக்குறள்**<br>குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்<br>சுற்றமாச் சுற்றும் உலகு. | 2 |
| **ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** | | **3X3=9** |
| 17. | **சங்க இலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**<br>**1.அறத்தில் வணிகம் கூடாது:**<br>எதிர்பார்ப்போடு பிறருக்கு உதவக்கூடாது. கைமாறு கருதாத உதவியே அறம்.<br>இது இன்றைய காலத்தேவை.<br>**2. கொடை:**<br>செல்வத்துப் பயனே ஈதல் என்கிறது சங்க இலக்கியம்.<br>இன்று பிறர்க்கு ஈகைக் குணம் குறைந்துவிட்டது. இது அதிகரிக்க வேண்டும்.<br>**3.பொய்யாச் செந்நா** – என்பது சங்க இலக்கியச் சூழலுக்கு ஏற்ப மனிதன் மாறுகிறான். பொய்யர்கள் மிகுந்துவிட்டனர். எனவே நற்றிணை கூறும் பிழையா நன்மொழியை நாம் கடைபிடிக்க வேண்டும். | 1<br>1<br>1 |
| 18. | **சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது - இடம் சுட்டிப் பொருள் தருக.**<br>**இடம்** : நாகூர் ரூமி எழுதிய சித்தாளு என்னும் கவிதையில் உள்ளது.<br>**பொருள்** : தொழிலாளர் மனச் சுமையைச் செங்கல் அறியாது.<br>**விளக்கம்** : மனச்சுமையைத் தலைச்சுமை அறியாதது போல, உலகில் பிறர் துன்பம் பற்றி உணராதவர்கள் பலர் உள்ளனர். | 1<br>1<br>1 |
| 19. | **அலகிட்டு வாய்பாடு**<br>கரு/வியும் – நிரை நிரை – கருவிளம்<br>கா/லமும் – நேர் நிரை – கூவிளம்<br>செய் /கை/யும் – நேர் நேர் நேர் – தேமாங்காய்<br>செய் /யும் – நேர் நேர் – தேமா<br>அரு/வினை/யும் – நிரை நிரை நேர் – கருவிளங்காய்<br>மாண் /ட – நேர் நேர் – தேமா<br>தமைச் /சு – நிரைபு (நிரை நேர்) – பிறப்பு<br>**இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.** | 2<br>1 |
| 20. | **ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கையில் கட்டாயம் வைத்திருக்க வேண்டியவை:**<br>❖ ஓட்டுநர் உரிமம்<br>❖ ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்<br>❖ ஊர்திக்குச் செலுத்திய வரிச் சான்றிதழ்<br>❖ ஊர்திக் காப்பீட்டுச் சான்றிதழ்<br>❖ மகிழுந்து, சரக்குந்து போன்ற வண்டிகள் அப்பகுதிகளில் ஓட்டுவதற்கான இசைவுச் சான்றிதழ்<br>**(ஏதேனும் மூன்று கருத்துகளுக்கு முழுமதிப்பெண் வழங்குக)** | 1<br>1<br>1 |

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

| | | |
|---|---|---|
| 21. | **தற்குறிப்பேற்ற அணி**<br>**அணி விளக்கம் :** இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.<br>**எ.கா :** போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட<br>**அணிப்பொருத்தம் :** காற்றில் இயல்பாக கொடி அசைந்த நிகழ்வை, கோவலனும் கண்ணகியும் மதுரைக்குள் வந்தால் மிகப்பெரும் துன்பம் ஏற்படும் என்று தனது குறிப்பை கொடியின் மீது ஏற்றிக் கூறியதால், தற்குறிப்பேற்ற அணியாகும். | 1<br>1<br>1 |
| 22. | **காலக்கணிதம்**<br>மாற்றம் எனது மானிடத் தத்துவம் ;<br>மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!<br>எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை<br>என்ப தறிந்து ஏகுமென் சாலை!<br>தலைவர் மாறுவார் ; தர்பார் மாறும் ;<br>தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!<br>கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!<br>உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;<br>நானே தொடக்கம்; நானே முடிவு;<br>நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!<br>**- கண்ணதாசன்** | 3 |
| | **பகுதி – 3**<br>**1X5=5** | |
| 23. | **படிவம் நிரப்புக.** | 5 |
| | **பகுதி – 4**<br>**2X4=8** | |
| 24. | **அ) நயம் பாராட்டுக**<br>**மோனை :** கோடை – குளிர்<br>**எதுகை :** கோடை – ஓடை<br>**இயைபு :** கனியே – தண்ணீரே – மலரே<br>**முரண் :** கோடை **X** குளிர்<br>**அணி :** உருவக அணி<br>(ஏதேனும் **நான்கு நயங்களுக்கு** முழுமதிப்பெண் வழங்குக) | 4 |
| | **அல்லது** | |
| | **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**<br>(பொருத்தமான தலைப்பு எழுதி, கவிதை வடிவில் எட்டு வரிகளுக்கு குறைவில்லாமல் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்குக) | 4 |
| 25. | **மொழிபெயர்க்க**<br>❖ ஒரு பள்ளியில் கற்றதை மறந்துவிட்டால், பள்ளியில் கற்ற கல்வியினால் பயன் என்ன! – **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**<br>❖ பெரும்பாலும் நாளையே இந்த வாரத்தின் மிகவும் பரபரப்பான நாள். - **ஸ்பானிஷ் பழமொழி**<br>❖ நம் இருண்ட தருணங்களில்தான் நாம் ஒளியைக் காண கவனம் செலுத்த வேண்டும். – **அரிஸ்டாட்டில்**<br>❖ வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பது மரணத்திற்குரியதல்ல. தொடர்ந்து முனைகின்ற தைரியமே கணக்கில் கொள்ளப்படுகிறது. – **வின்ஸ்டன் சர்ச்சில்** | 4 |

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

| | | |
|---|---|---|
| | **அல்லது** | |
| | **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**<br>**தம்பி**! எங்கே **நிற்கின்றாய்?**<br>"**நீங்கள்** சொன்ன **இடத்தில்தான் அண்ணே**! **எதிர்ப்பக்கத்தில்** ஒரு **தேநீர்க்கடை இருக்கின்றது**"<br>"அங்கேயே **தேநீர் குடித்துவிட்டு, செய்தித்தாளைப்** படித்துவிட்டு இரு... **நான் சீக்கிரமாக வந்துவிடுவேன்.**<br>"**அண்ணா**! **சண்முகத்தையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்** அண்ணா! **அவனைப் பார்த்தே நீண்ட நாள்களாயிற்று**!"<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக.) | 4 |
| | **பகுதி III** | |
| **விரிவான விடையளி** | | **2X5=10** |
| 26. அ) | **கருணையனின் தாய் மறைவிற்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.**<br>❖ பூமித்தாயே என் அன்னையின் உடலைக் காப்பாயாக<br>❖ அன்னையின் உடலை மண் இட்டு மூடி மலர்களையும் கண்ணீரையும் பொழிந்தான்<br>❖ என் மனம் பறிக்கப்பட்ட மலர்போல் உள்ளது<br>❖ அம்பினால் உண்டான புண்ணின் வலி போல் மனம் வலிக்கின்றது<br>❖ என்னைத் தனியே தவிக்கவிட்டுவிட்டு என்தாய் சென்றுவிட்டார்.<br>**(துணைத்தலைப்புகளுடன் பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக)** | 5 |
| | **அல்லது** | |
| ஆ) | **அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.**<br>♣ துணைப்பாடக் கதைப்பகுதியில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் வீரப்பன் ஆவார்.<br>♣ குப்புசாமியின் நெருங்கிய நண்பன் வீரப்பன்.<br>♣ குப்புசாமிக்கு அனைத்து உதவிகளையும் செய்வார்.<br>♣ தன் உறவினர் வீட்டில் அடைக்கலம் புகுந்த குப்புசாமிக்கு வீரப்பன் கடிதம் எழுதினான்.<br>♣ நண்பன் குணமாக மூன்று ரூபாய் கடன் வாங்கி அனுப்பிவைத்தான்.<br>♣ இன்னோர் இடத்தில் பணம் கேட்டிருக்கிறேன்˙ உன்னைப் பார்க்க வருவேன்.<br>♣ உன்னைப் பார்த்தால் தான் நான் தின்னும் சோறு, சோறாக இருக்கும் என்ற அன்பு மொழிகள் வீரப்பன் உடையது.<br>♣ கடன்பட்டாவது நண்பனின் உயிரைக்காக்க வேண்டும் என்று எண்ணிய வீரப்பன் கருணை உள்ளம் படைத்தவன்.<br>**(துணைத்தலைப்புகளுடன் பொருத்தமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்குக)** | 5 |

| | | |
|---|---|---|
| 27.<br>அ) | **உறவினருக்குக் கடிதம்**<br>➢ இடம், நாள் (வலப்புறம்)<br>➢ விளித்தொடர்<br>➢ கடிதச்செய்தி<br>➢ முடிவு, ஒப்பம்<br>➢ உறைமேல் முகவரி | 5 |
| | **அல்லது** | |
| ஆ) | **பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடும் விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்க்கும் பெற்றோர்க்கும் பள்ளியின் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றியுரை வரைக.**<br>**நன்றியுரை**<br>❖ பசுமைப் பாதுகாப்புப் படை சார்பில் எம்பள்ளியில் விழா சிறப்பாக நடைபெற்றது.<br>❖ மரம் நடும் விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்க்கு நன்றி.<br>❖ விழாவிற்கு வருகை புரிந்த பெற்றோர்க்கு நன்றி.<br>❖ மரக்கன்றுகள் தந்து உதவிய தொண்டு நிறுவனத்தார்க்கும் நன்றி.<br>❖ விழா சிறப்புற நடக்க உதவிய தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் விழா சிறப்பாக நடத்த உதவிய அனைவர்க்கும் நன்றி.<br>❖ மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!! வளமாக வாழ்வோம்!!!<br>நன்றி வணக்கம். | 5 |


**சுந்தரராஜன் மா**

**B.Lit., M.A., B.Ed., D.T.Ed**

9566585860

ஸ்ரீராம் வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி,

பொட்டனேரி, சேலம் - 636453.


***ஜெமி வினா வங்கி - தமிழ்***

www.Padasalai.Net